# 2.8 இந்த நித்திய வாழ்வு

**வேத வசனம்:** குமாரனைக் கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்தியஜீவனை அடைவதும், நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவதும், என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது என்றார்.யோவான் 6:40

**அறிக்கை:** குமாரனாகிய இயேசுவை உடையவனுக்கு நித்திய வாழ்வ உண்டு

**சத்தியம்:** தேவன் நமக்கு நித்திய வாழ்வைக் கொடுத்திருக்கிறார். இந்த நித்திய வாழ்வு அவருடைய குமாரனில் காணப்படுகிறது. எனவே தேவனுடைய குமாரனை உடையவனுக்கு நித்திய ஜீவன் உண்டு.

## பாடக்குறிப்புகள்

- **தேவன் நித்திய வாழ்வைக் கொடுத்திருக்கிறார்** - *1 யோவான் 5:12*
- **ராஜரீக வாழ்க்கை** - *எபே 1:20*
- **மகிமையான வாழ்க்கை** - *வெளி 21:23-27*
- **பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்** - *அப் 2:17,18*

## வேதப்பகுதி

*வெளி. 21:18-27*

## ஆர்வமூட்டும் வினாக்கள்

(ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கேள்விகளை விவாதிக்கலாம்)

- *வெளி. 21 இன்படி பரலோகம் எதைப் போன்றது?*
- *எவ்வாறு நாம் நித்திய வாழ்வைக் குறித்த நிச்சயத்தோடிருக்கலாம்?*
- *ரோமர் 14:17 ல் குறிப்பிடப்பட்டுள்ள பரலோக வாழ்விற்கானக் குணநலன்கள் யாவை?*




**நித்திய வாழ்வுக்கான திறவுகோல்:** நித்திய வாழ்வை பரலோக வாழ்வு என்றும் கூறுகிறார்கள். ஒரு மனிதன் தேவனாகிய கர்த்தர் தன்னை ஆளுகை செய்ய அனுமதி அளிக்கும்போது அவன் தேவனுடைய சமாதானம், சந்தோஷம் மற்றும் மேலான வல்லமை நிறைந்த பரலோக ராஜியத்தின் குடிமகன் ஆகிறான். இயேசுவே நமது நித்திய வாழ்விற்கானத் திறவுகோல். சிலுவையில் அவர் செய்து முடித்த கிருபையின் பணியாகிய மரணத்தின் மூலமே அல்லாமல் இரட்சிப்பின் நம்பிக்கையே கிடையாது. ஆனால் அவருடைய கிருபையால் இன்று நித்திய வாழ்வு கிடைக்கிறது. எவ்வாறு தேவன் இன்று உனக்கு நித்திய வாழ்வைக் கொடுக்க முடியும்? வலப்புறத்தில் உள்ள கோடுகளில் நாம் ஆவிக்குரிய வாழ்வில் வளர்வதற்கான மூன்று வழிகளை எழுது. (சங். 1:1,2. யோவான் 4:10. எபே. 5:18 ஆகிய வசனங்களைப் பார்க்கவும்)

______

______

______

**செயல்**

**பரலோகத்தின் குடியுரிமையை விவரித்து தேவனைக் கனம்பண்ணு. உன்னுடைய வெற்றிகள் மற்றும் முன்னேற்றங்களுக்காகத் தேவனை மகிமைப்படுத்து**

**சிந்திக்க:** *தேவனுடைய ஒளிக்குள் நீ பிரவேசிக்கும்போது, இருளில் எதை விட்டுச் செல்வாய்?*

______

______

**ஜெபம்:** *அனுதினமும் பரலோக குடியுரிமையைப் புரிந்துகொள்ள உதவுமாறு ஜெபிக்கும் ஜெபம் ஒன்றை எழுது.*

______

______